பயங்கரவாத எதிர்ப்பு குறித்த இந்தியா-இந்தோனேசியா கூட்டு பணிக்குழுவின் 7-வது கூட்டம்

பயங்கரவாத எதிர்ப்பு குறித்த இந்தியா-இந்தோனேசியா கூட்டுப் பணிக்குழுவின் 7-வது கூட்டம் 2026 நவம்பர் 12 அன்று புது தில்லியில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்கு, இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் (பயங்கரவாத எதிர்ப்பு) டாக்டர் சுஹேல் அஜாஸ் கான் மற்றும் இந்தோனேசியக் குடியரசின் தேசிய பயங்கரவாத எதிர்ப்பு முகமையின் (பிஎன்பிடி) சர்வதேச ஒத்துழைப்புக்கான துணைத் தலைவர் திரு. டியோனிசியஸ் எல்வான் ஸ்வாசோனோ ஆகியோர் இணைந்து தலைமை தாங்கினர். இரு தரப்பினரின் தொடர்புடைய துறைகள் மற்றும் ஏஜென்சிகளின் பிரதிநிதிகளும் கூட்டத்தில் பங்கேற்றனர்.

2. மூலோபாயக் கூட்டாளி நாடுகளாக, பயங்கரவாதத்தைத் தடுப்பதிலும், அதனை எதிர்த்துப் போராடுவதிலும் இருதரப்பு ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை இந்தியாவும் இந்தோனேசியாவும் வலியுறுத்தின. இரு தரப்பினரும் பயங்கரவாதத்தின் அனைத்து வடிவங்களையும் வெளிப்பாடுகளையும் சந்தேகத்திற்கு இடமின்றி வன்மையாகக் கண்டித்ததுடன், பயங்கரவாதத்தின் மீது எவ்வித சகிப்புத்தன்மையும் காட்டக்கூடாது என்ற கொள்கையை மீண்டும் உறுதிப்படுத்தினர். பயங்கரவாதத்தை முழுமையான மற்றும் தொடர்ச்சியான முறையில் எதிர்த்துப் போராடுவதற்காக, தீர்க்கமான மற்றும் ஒருங்கிணைந்த சர்வதேச முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் இரு தரப்பினரும் வலியுறுத்தினர்.

3. எல்லை தாண்டிய பயங்கரவாதம் உள்ளிட்ட உள்நாட்டு, பிராந்திய மற்றும் உலகளாவிய பயங்கரவாதச் சூழல் மற்றும் அதனால் ஏற்படும் அச்சுறுத்தல்கள் குறித்த மதிப்பீடுகள் தொடர்பாக இரு தரப்பினரும் தங்களது கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர். பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதில் தற்போது நிலவும் மற்றும் புதிதாக உருவாகி வரும் சவால்கள் குறித்து இரு தரப்பினரும் விவாதித்தனர். அவற்றில், பயங்கரவாதத்திற்கு வழிவகுக்கும் தீவிரவாதச் சிந்தனைகள் மற்றும் வன்முறைத் தீவிரவாதத்தைத் தடுப்பது, பயங்கரவாதத்திற்கு நிதியுதவி அளிப்பதை முறியடிப்பது, இணையம் மற்றும் வளர்ந்து வரும் புதிய தொழில்நுட்பங்களைப் பயங்கரவாத

நோக்கங்களுக்காகத் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுப்பது, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கும் பயங்கரவாதத்திற்கும் இடையிலான தொடர்பை முறியடிப்பது உள்ளிட்ட அம்சங்கள் இடம்பெற்றன.

4. பயங்கரவாதத்தை முழுமையான மற்றும் தொடர்ச்சியான முறையில் எதிர்த்துப் போராடுவதற்கு சர்வதேச ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை இரு தரப்பினரும் வலியுறுத்தினர். உலகளாவிய பயங்கரவாதத்தைத் திறம்பட எதிர்த்துப் போராடுவதற்காக, ஐக்கிய நாடுகள் சபை, ஆசியான், பிரிக்ஸ் மற்றும் எஃப்ஏடிஎஃப் உள்ளிட்ட பலதரப்பு அமைப்புகளில் தங்களுக்கிடையிலான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான உறுதிப்பாட்டை இரு தரப்பினரும் மீண்டும் உறுதிப்படுத்தினர்.

5. பயங்கரவாதத்திற்கு எதிரான தற்போதைய ஒத்துழைப்பு இந்தியா-இந்தோனேசியா விரிவான உத்திசார் கூட்டாண்மையின் முக்கிய அங்கமாக உள்ளது.

6. இருதரப்பு திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கான வழிமுறைகள் குறித்து விவாதிப்பதற்காக, இந்தோனேசியக் குழுவினர் 2026 நவம்பர் 13ம் தேதி தேசியப் பாதுகாப்புப் படையின் (என்எஸ்ஜி) தலைமையகத்திற்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

7. பயங்கரவாத எதிர்ப்பு குறித்த கூட்டுப் பணிக்குழுவின் அடுத்த கூட்டத்தை, இரு தரப்பினருக்கும் வசதியான ஒரு தேதியில் ஜகார்த்தாவில் நடத்துவதற்கு இரு தரப்பும் ஒப்புக்கொண்டன.

புது தில்லி

நவம்பர் 12, 2026